**O.S. No. 104 /2015**

**Date:12.02 .2026**

**பி.வா.சா.1 காசிநாடார்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிராது தபசில் சொத்தில் 2 வது அயிட்ட சொத்தானது கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரும் ராமசாமி என்பவரும் கிரையம் பெற்றது என்றால் சரிதான். 3 வது அயிட்ட சொத்தானது கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் நானும் சேர்ந்து தான் 23.04.1983 ம் ஆண்டில் கிரையம் பெற்றது என்றால் சரிதான். 4 வது அயிட்ட சொத்தானது எனது அப்பா சுப்பையா நாடார் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். தற்போது எனது தந்தை உயிருடன் இல்லை. 4 வது அயிட்ட சொத்தைப்பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் தான் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பின்னர் 4 வது அயிட்ட சொத்தானது கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவருக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் எனக்கும் சேர்ந்து தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 5 வது அயிட்ட சொத்தான வீட்டில் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் குடியிருந்தார் வந்தார் என்றால் சரியல்ல என் அம்மாவுடன் க.எண்.13/75 ல் குடியிருந்து வந்தார். மேற்படி வீட்டிற்கு கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் பெயருக்கு குடும்ப அட்டை வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனது அம்மா தற்போது உயிருடன் இல்லை. எனது அப்பாவின் குடும்ப அட்டை என் கைவசம் இருக்கிறதா என்றால் இல்லை. 1 ம் பிரதிவாதி முருகேஸ்வரி கொடைக்கானலில் எத்தனை வருடம் குடியிருக்கிறார் என்றால் திருமணம் ஆன முதல் அங்கு தான் வசித்து வருகிறார். முருகேஸ்வரிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும், தேதி ஞாபகம் இல்லை. 1 ம் பிரதிவாதி மகளுக்கு திருமணம் ஆகி 2 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி மகளுக்கு வயது என்னவென்று தெரியாது. 1 ம் பிரதிவாதி குடும்ப

நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே ஊருக்கு வருவார் மீத நாட்களில் கொடைக்கானலில் தான் இருப்பார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்பவரின் கணவர் பெயர் ராஜா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கணவர் எங்களுக்கு சொந்தம் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு எங்கள் குடும்ப நபர்கள் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தோம். 1ம் பிரதிவாதியின் திருமணம் காதல் திருமணம் இல்லை. 1ம் பிரதிவாதியின் திருமண அழைப்பிதழ் அடித்தோமா என்றால் இல்லை கோவிலில் வைத்து தான் நடைபெற்றது. 1ம் பிரதிவாதியின் திருமணம் பதிவு செய்யப்படவில்லை. பஞ்சவர்ணம் என்பவர் கொடைக்கானலில் எத்தனை வருடங்களாக அங்கு உள்ளார் என்றால் எனது அண்ணன் இறந்த பின்னர் அங்கு சென்றார். எனது அண்ணன் கோபால் என்ற போபால கிருஷ்ணன் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் தான் இறந்தார் என்றால் சரிதான். கோபால் என்ற போபால கிருஷ்ணன் என்பவர் இறந்தபின்னர் அவரது மனைவி மற்றும் அவரது பிள்ளைகளுக்கு பிராது சொத்தில் உள்ள பங்கு சொத்துக்கள் அனைத்தும் சேருமா என்றால் சேரும். பஞ்சவர்ணம் என்பவர் அவருக்கு ஏற்பட்ட சொத்துக்களைப் பொறுத்து கோபால் என்ற போபால கிருஷ்ணன் என்பவர் இறந்த பிறகு எந்தவித ஏற்பாடும் யாருக்காவது செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. கோபால் என்ற போபால கிருஷ்ணன் என்பவர் இறந்த பிறகு அவரது வாரிசு என்ற நிலையில் பஞ்சவர்ணத்திற்கு கிடைத்த சொத்துக்களை யாருக்கும் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை . தாவா வழக்கிற்கு முன்பாக வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். மேற்படி அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு ஏதும் அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை அவரிடம் நேரடியாக கேட்டதற்கு 6 மாதங்களில் காலி பண்ணிவிடுவதாக சொன்னால் அதனால் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. முத்தம்மாள் என்பவர் பாக வழக்கு போடும் வரை அவரை வீட்டை விட்டு காலி செய்ய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை ஏதும் எடுத்தீர்களா என்றால் எடுக்கவில்லை. வாதி தாக்கல் செய்த வழக்கில் பஞ்சவர்ணத்தை கட்சி

சேர்க்காததால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராது சொத்தில் பஞ்சவர்ணத்திற்கும் உரிமை உள்ளது என்ற காரணத்திற்காக தான் அந்த கட்சியை எடுத்துள்ளேன் என்றால் பஞ்சவர்ணத்திற்கு சேரவேண்டிய சொத்துக்களை அவரது மகளுக்கு கொடுக்க சொல்லி விட்டார். கோபல் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரின் சொத்துக்களில் பஞ்சவர்ணத்திற்கு சேரக்கூடிய பாக சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்து விட பஞ்சவர்ணம் சொன்னதாக எங்கள் எதிர் வழக்குரையில் கட்சி சொல்லவில்லை . நான் தாக்கல் செய்த பிவா.சா.ஆ.1 பாக பத்திரத்தில் பஞ்சவர்ணம் சம்மந்தப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாக பத்திரத்தில் பஞ்சவர்ணத்திற்கு சேரவேண்டிய சொத்துக்களை முருகேஸ்வரிக்கு கொடுத்து விடலாம் என்று சொன்ன விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தில் கணவன், மனைவி பிரச்சனைக் குறித்து கிராமத்தில் சாதி வழக்கப்படி விவாகரத்து செய்யும் வழக்கம் உண்டு என்றால் இல்லை. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவருக்கும், பஞ்சவர்ணத்திற்கும் 1ம் பிரதிவாதி பிறந்த 2 வருடங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு அவர்கள் இருவரும் ஊர் வழக்கப்படி விவாகரத்து செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அதனை பின்னிட்டு பஞ்சவர்ணம் என்பவர் கொடைக்கானலில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் இந்து நாடார் சமுதாயம் உண்டு என்றால் சரிதான். சேர்ந்தமரம் கிராமம், திருமலாபுரம் ஊரில் மெயின் ரோட்டில் க.எண். 12/119ல் உள்ள வீட்டில் இருந்து வரும் லேட். சுப்பையா மகன் ரவீந்தரன் என்பவர் முன்பு இந்து நாடார் உறவு முறை சமுதாய நிர்வாகஸ்தராக இருந்தாரா என்றால் தற்போது கிடையாது ஆனால் முன்னர் இருந்துள்ளார். மேற்படி சுப்பையா என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு கிடையாது. ரவீந்தரன் என்பர் எத்தனை வருடங்களுக்கு முன்பாக இந்து நாடார் உறவு முறை சமுதாய நிர்வாகஸ்தராக இருந்தார் என்றல் 6 வருடங்களுக்கு முன்பாக

இருந்திருக்கலாம். மேற்படி ரவீந்தரன் என்பவருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. சேர்ந்தமரம் கிராமம், திருமலாபுரம் ஊரில் மெயின் ரோட்டில் க.எண். 12/12 ல் உள்ள ஆறுமுகம் மகன் குட்டி ராஜா என்பவரை தெரியுமா என்றால் தெரியும். ரவீந்தரன் என்பவரை வாதி தரப்பில் 2வது சாட்சியாக விசாரித்த விவரம் தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது வழக்கறிஞர் சொல்லி தெரியும். ரவீந்தரன் என்பவரை குறுக்கு விசாரணை செய்ய எனது வழக்கறிஞருக்கு விவரங்களை நான் தான் சொன்னேனா என்றால் தெரியாது. குட்டி ராஜா என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு கிடையாது. குட்டி ராஜாவுக்கும் எனக்கும் பிரச்சனை ஏதும் இல்லை. குட்டி ராஜா என்பவரும் இந்து நாடார் உறவு முறை சமுதாயத்தில் நிர்வாகியாக இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எங்கள் ஊரில் எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட கல்வி விநாயகர் கோவில், கருப்பசாமி கோவில், பூமாரியம்மன் கோவில், மாலையம்மன் கோவில் ஆகியவை உள்ளது என்றால்சரிதான். மேற்படி கோவில்களுக்கு நன்கொடைகள் கொடுத்தவர்கள் பெயருக்கு கல்வெட்டுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில்களில் நடத்தக்கூடிய விழாக்களுக்கு தலைகட்டு வரி போட்டு வசூல் செய்யும் வழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரும் மேற்படி கோவில்களுக்கு நன்கொடைகள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் நன்கொடை கொடுத்த விவரம் பற்றி கல்வெட்டில் இருக்கிறதா என்றால் அது பற்றி தெரியாது. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரும், வாதியும் கணவன், மனைவி என்ற ஸ்தானத்தில் நன்கொடை கொடுத்ததற்கான விவரம் கல்வெட்டுகளில் உள்ளது என்றால் இருக்காது. கல்வெட்டுகளில் நன்கொடை விவரம் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள நீதிமன்ற ஆணையர் மூலம் நடவடிக்கை எடுக்க ஆட்சேபணை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. குட்டி ராஜா என்பவரை விசாரித்ததை பற்றி தெரியாது, அவரை நான் குறுக்கு விசாரணை செய்ய எனது வழக்கறிஞருக்கு தகவல் கொடுக்கவில்லை. எனது பெரியப்பா என்று யாரும்

எனக்கு இல்லை. திருமலாபுரம் கிராமத்தில், வடக்கு தெருவில் க.எண்.129 ல் உள்ள சங்கரலிங்கம் என்பவரின் மகன் மாரியப்பன் என்பவரை தெரியுமா என்றால் சாட்சி அவர் கூறுகெட்டவர் என சாட்சியம் அளிக்கிறார். மாரியப்பன் என்பவரை எனக்கு தெரியும். அவரது அம்மா பெயர் கருப்பாயி என்றால் சரிதான். கருப்பாயி என்பவர் எனது பெரியப்பா மகள் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.